www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi12T

15-09-2023

**தென்காசி மாவட்டம்**

**காலாண்டு பொதுத் தேர்வு - 2023**

**வகுப்பு 12**

**பொதுத்தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்க்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**பகுதி - I**

**14×1=14**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

1) சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
அ) ஒளிப்பறவை ஆ) ஒருகிராமத்து நதி
இ) சூரிய நிழல் ஈ) பூஜ்ஜியங்களின் சங்கிலி

2) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) நன்னூல்
இ) தொல்காப்பியம் ஈ) தண்டியலங்காரம்

3) 'வெங்கதிர்' என்ற சொல்லின் இலக்கணம்
அ) வினைத்தொகை ஆ) உருவகம்
இ) இடைக்குறை ஈ) பண்புத்தொகை

4) **பொருத்துக.**
அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4. மேய்ச்சலை மறந்தன
அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

5) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

6) இரு திணைக்கும் பொதுவாக வரும் சொற்கள்
அ) குழந்தை, கதிரவன் ஆ) மரம், மனிதர்கள்
இ) சீதா, இராமன் ஈ) நாம், நாங்கள்

7) சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ............ ஏற்படுகின்றன.
அ) பிழைகள் ஆ) இலக்கணப் பிழை
இ) பொருள் ஈ) பொருள் மாறுபாடுகள்

8) வேடர்குலத் தலைவன்
அ) குகன் ஆ) சுக்ரீவன் இ) சடாயு ஈ) வீடணன்

9) 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' என்ற பாடல்வரி இடம் பெற்றுள்ள நூல்
அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) நற்றிணை

10) 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

11) 'காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை' - இத்தொடரில் 'கலன்' என்ற சொல் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

12) 'படிமம்' என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

13) 'விளியறி ஞமலி'-இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

14) சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3×2=6

15) கலிவிழா ஒலி விழா - விளக்கம் தருக.
16) கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
17) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
18) இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19) அக்காலத்துக் கல்விமுறையில் மனைப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
20) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7×2=14

22) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக**
அ) புதுப்பெயல் ஆ) பூம்பாவாய்
23) **கீழ்க்காணும் சொல்லுருபுகளில் ஒன்றை மட்டும் கொண்டு பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க.**
அ) முன் ஆ) தானே
24) **மயங்கொலி பிழைகளை நீக்கி எழுதுக.**
காளையில் பூத்த மள்ளிகை மனம் வீசியது.
25) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
26) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து** எழுதுக.
கலை, களை, கழை
27) **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.**
அ) உயர்ந்தோர் ஆ) சாற்றி
28) திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?
29) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**
அ) Passport ஆ) Visa
30) **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**
குமரன் வீடு பார்த்தேன்.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

31) வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32) சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33) சினத்தால் வரும் கேட்டினைக் எழுதுக.
34) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

35) சங்கப் பாடல்களில் 'ஒலிக்கோலம்' குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
36) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
37) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
38) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3×4=12

39) பொருள் வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



40) தமிழாக்கம் தருக.

அ) Learning is a treasure that will follow its owner everywhere

ஆ) A new language is new life

இ) If you want people to understand you, speak their language

ஈ) The limits of my language are the limits of my world

41) கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள மையக் கருத்தை எழுதி ஏற்புடைய நயங்களைச் சுட்டுக

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

42) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

யானைக்கும் அடிசறுக்கும்

(அல்லது)

எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43) மழை (அல்லது) நட்பு என்னும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதுக.

43) காது கேளாத மாணாக்கருக்கான மாற்றுவினா

நாம் வாழும் தமிழ்நாடு வெப்பமண்டல பகுதியில் உள்ளது. எனவே நீர் சார்ந்த தன்னுணர்ச்சி தமிழக மக்களுக்கு மிகுதி தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்பது பழமொழி. தமிழ் மரபில் நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன. குளித்தல் என்ற சொல்லுக்குக் குளிர வைத்தல் என்பதே பொருளாகும்.

வினாக்கள்:

அ) நாம் வாழும் தமிழ்நாடு எந்தப் பகுதியில் உள்ளது?

ஆ) நீரைப்பற்றிய பழமொழி ஒன்றினை எழுதுக.

இ) தமிழர் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவை யாவை?

ஈ) 'குளித்தல்' என்ற சொல்லின் பொருள் யாது?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

'செய்ந்நன்றியறிதலே அறம்' - என்பதை திருக்குறள் வழி நின்று விளக்குக.

45) தாய்வழிக்குடும்பம், தந்தைவழிக்குடும்பம், தனிக்குடும்பம் குறித்து தொகுத்து எழுதுக.

(அல்லது)

பண்டைக் காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46) 'உரிமைத் தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க

(அல்லது)

பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விளக்குக.

திரு.மொ.மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம்-627809,
தென்காசி மாவட்டம்.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47) அ) 'விண்வேறு' . . . . எனத் தொடங்கும் 'இதில் வெற்றிபெற', பாடலை எழுதுக.

ஆ) 'படும்' - என முடியும் குறளை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com